முருகப்பெருமான் துணை

**மகான் பொய்கை ஆழ்வார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.08.2022**, புதன்கிழமை

1. தனயோகம் ஞானயோகமென
தவயோகம் கொண்டு அருளுகின்ற
ஞான குருவே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது யாளி திங்கள்
குறைவிலா அட்டம திகதி புந்தி வாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 08 நாள், 24.08.2022 புதன்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு அறுபத்து மூவர்களை தொடர்ந்து
3. தொடர்ந்து ஆழ்வார்களும் உரைப்போம்
தெய்வீகமாக பொய்கையாழ்வாரும்
தொடர்ந்து உலகநலமுற உரைப்பேன்
தேசிகனார் காட்டும் மெய்ஞான வழிகள்
4. வழிகள்தனை உலக மக்கள்
வணங்கி ஏற்று இனிதே
அரியாமை பெற வேண்டி வர
அருளமுதை உண்டு வர
5. வருகவே தேக மனோபலம்
வல்லமையான ஞான பலமும்
முருகப் பெருமானும் அருளும்படி
முழுமை சக்தியும் கண்டு தேறுவர்
6. தேறவே உலகம் எங்கிலும்
தெய்வ அம்சமாக அரங்கன்
கூறுகின்ற ஞான உபதேசங்களை
கொள்கையாக பரப்பி உலகோர்
7. உலகோர் சேவை ஆற்றிவர
உலகமாற்றமாக மாற்றம்தானும்
ஞாலமதில் சடுதி கண்டு பேருலகம்
ஞானலோகம் ஆகக் கூடும்
8. கூடவே மனிதர்கள் இடையேயும்
குருவருளாக சக்திகள் பரவியே
நாடெங்கிலும் ஞானவான்கள் படை
ஞானஆட்சி தரும் வண்ணம் பெருகி
9. பெருகியே நல்லலோர்கள் தலைமை
பிசகின்றி இந்த உலகம் கண்டு
முருகப்பெருமான் வழிபாட்டின் பலம்
முழுமைபட உலகோர் அறிந்து

10. அறிந்துதெளிந்து ஞான ஆட்சி
அமைந்திட வழிவகை காண்பர்
அறிந்து உணர்ந்து அரங்கன் வழியை
அகலா தொடர்ந்து வந்து நாளும்

11. நாளும் ஞானிகள் பூசைசெய்து
ஞானமுடன் தருமம் தொடர
காலம் வெல்லும் ஆற்றல் கூடி
கலியுகத்தை ஞானயுகமாக மாற்றுவர்
அருளாசி முற்றே

–சுபம்–